திருச்சி தெற்கு மாவட்டக் கழக இளைஞரணியில் புதிதாக இணைந்துள்ள இளைஞர்களை பகுதி, ஒன்றிய, நகர, பேரூர், வாரியாக அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்களாக நியமித்துள்ளார். கழக இளைஞரணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி இவர்களுக்கான அறிமுகக் கூட்டம் மற்றும் பயிற்சி பாசறைக் கூட்டம் தெற்கு மாவட்ட கழகச் செயலாளர் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் நடைபெற்றது.

திருச்சி தெற்கு மாவட்ட இளைஞரணியின்

அறிமுகம்-பயிற்சிப் பாசறை-வலைதளப் பயிற்சிக் கூட்டம்!

அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யா மொழி தலைமையில் நடைபெற்றது !

திருச்சி, ஜூன் 6-

திருச்சி தெற்கு மாவட்ட கழக இளைஞரணியினருக்கு பயிற்சி பாசறை மற்றும் வலைதள பயிற்சி அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில்கழக இளைஞரணிச் செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் செயல்பாட்டால் ஈர்க்கப்பட்ட பெருவாரியான இளைஞர்கள் கழக இளைஞரணியில் தங்களை இணைத்துக்கொண்டு பணியாற்றத் தொடங்கியுள்ளனர்.

அவ்வகையில் திருச்சி தெற்கு மாவட்டக் கழக இளைஞரணியில் புதிதாக இணைந்துள்ள இளைஞர்களை பகுதி, ஒன்றிய, நகர பேரூர், வாரியாக அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்களாக நியமித்துள்ளார் கழக இளைஞரணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி

இவர்களுக்கான அறிமுகக் கூட்டம் மற்றும் பயிற்சி பாசறைக் கூட்டம் இன்று தெற்கு மாவட்ட கழகச் செயலாளர் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் நடைபெற்றது.

கழகத்தின் இதயமாம் இளைஞரணியில் இணைந்துள்ள இளைஞர்கள் அனைவருக்கும் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டார். அதனைத் தொடர்ந்து இளைஞர் அணி நிர்வாகிகள் குறிப்பு நோட்டுகளை (மினிட்புத்தகம்) வழங்கினார்.

மாநகரக் கழகச் செயலாளர் மு.மதிவாணன், செய்தி தொடர்பு இணைச் செயலாளர் தமிழன் பிரசன்னா, சமூக வலைதள பயிர்ச்சியாளர் இளமாறன்,

மாவட்ட அமைப்பாளர் அ.வெங்கடேஸ் குமார், மாநகர அமைப்பாளர் மு.ர.முத்துதீபக் மற்றும் மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர் கழக அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

கத்தார் தி.மு.க. அயலக அணி சார்பாக கலைஞர் பிறந்தநாள் விழா –

தமிழ் பாடத்தில் முழு மதிப்பெண் பெற்ற மாணவிகளுக்கு பாராட்டு!

அமைப்பாளர் மதன்குமார் ஒருங்கிணைப்பில் நடைபெற்றது!

கத்தார், ஜூன் 6-

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு ஜூன் 3 அன்று செவ்வாய் இரவு 08.00 மணியளவில் ஜாத்தர் (ரமதா சிக்னல் அருகில்)Zaatar Restaurant பிறந்தநாள் விழா கத்தார் திமுக அயலக அணி அமைப்பாளர் மதன் குமார் ஒருங்கிணைப்பில், துணை அமைப்பாளர்கள் ஆரூர் பாலாஜி, கத்தார் ப.அப்துல் ரஷீத் தலைமையிலும், துணை அமைப்பாளர்கள் மேலூர் மதன், ஜி.எஸ்.ஆர். சத்திய ராஜ், பரந்தாமன், ஹக்கீம் மற்றும் ரபீக் அவர்களின் முன்னிலையிலும் கேக் வெட்டி, அறுசுவை உணவு வழங்கி சிறப்பாக கொண்டாடப்பட்டது.

மேலும் கத்தார் திமுக அயலக அணி இளைஞரணி செயலாளர் மற்றும் நிர்வாகிகளான செந்தில், குரும்பூர் தாஹிர், விக்னேஷ், சதீஷ், பவித், இப்திகார், சவுக்கத் அலி,அருள், சுதானந்தம், கங்காதரன்,மெய்யநாதன், ஷேக் அப்துல்லா, பங்கேற்புடன் நடைபெற்ற நிகழ்வில் கத்தாரில் முதன் முறை யாக, திருமதி வாசுகி சத்யபாபு மற்றும் வானேஸ்வரி மோகன் குமார் ஆசிரியர்களின் மாணவிகளான தமிழ் பாடத்தில் நூற்றுக்கு நூறு மதிப்பெண்கள் பெற்று அசாதாரணமான சாதனை படைத்த தங்க மகள்கள் ரம்யா மற்றும் ராஜ்ரீ இருவருக்கும் கலைஞர் பிறந்த ஜூன் 3 நாளில் கத்தார் அயலக திமுக NRTIA Qatar சார்பில் கேடயம் வழங்கி பாராட்டு விழாவும் நடைபெற்றது.

இதில் கூட்டணி கட்சி நிர்வாகிகள்,கத்தார் வாழ் தமிழ் அமைப்புகளின் நிர்வாகிகள் மோகன் குமார்,திரு.ரவீந்திர பிரசாத்,. ராம செல்வம், வலியுல்லா உசேன்,திரு.இப்ராஹிம் யாசின், திரு.முகிலன், ரியாஸ், தொகுப்பாளர் ஆர்.ஜே. மிரண்டா, சிங்க பெண்கள் மற்றும் நண்பர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

புதுக்கோட்டை சந்தைப்பேட்டை அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில், மாணவிகளுக்கு வகுப்பறை மற்றும் கழிப்பறை வசதிகள், மேம்படுத்தி தர வேண்டும் பள்ளி நிர்வாகம் மற்றும் பெற்றோர்கள் இடமிருந்து கோரிக்கைகள் பெறப்பட்ட நிலையில் 04/06/2025 அன்று மேற்கண்ட பள்ளிக்கு நேரடியாகச் சென்று ஆய்வு மேற்கொண்டு, புதிய வகுப்பறை கட்டிடம், மேல் எழுப்புவதற்கு போதுமான வசதிகள் உள்ளனவா என்பது குறித்து பார்வையிட்டதோடு, மாணவிகளிடையே கல்வியின் அவசியம் குறித்து எடுத்துரைத்து கலந்துரையாடியாடினார். புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா. இந்நிகழ்வின் மாமன்ற உறுப்பினர்கள் அறிவுடைநம்பி, .பால்ராஜ் உள்ளிட்ட பள்ளி தலைமையாசிரியர் உள்ளிட்ட ஆசிரியர் பெருமக்கள் கழக நிர்வாகிகளும் உடன் இருந்தனர்.

சேலம் கிழக்கு மாவட்டம் மல்லூர் பேரூர் கழகத்தின் சார்பில் தலைவர் கலைஞரின் 102 வது பிறந்த தினத்தையொட்டி அவருடைய திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மக்களுக்கு மல்லூர் பேரூர் கழக பொறுப்பாளர். ந . சுரேந்திரன் பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கினார். உடன் பேரூர் கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

புழல் எம். நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில்

மாதவரம் வடக்கு பகுதி சார்பில் செம்மொழி நாள் கொண்டாட்டம்!

கே. அங்குசாமி தலைமையில் மாணவர்களுக்கு நல உதவிகள்!

சென்னை, ஜூன் 6 -

மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளான ஜூன் 3 செம்மொழி நாள் கொண்டாட்டத்தை முன்னிட்டு, பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில், 15 வது வட்டம் பொன்னேரி சட்டமன்றத் தொகுதி பழையநாபாளையம் பகுதியில் அமைந்துள்ள, சென்னை மாநகராட்சி துவக்கப்பள்ளியில் படிக்கும் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகளுக்கு 15வது வட்டச் செயலாளர் கே. அங்குசாமி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், மாணவ, மாணவிகள் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த முத்தமிழ் அறிஞரின் பிறந்த நாள் விழா கேக்கினை வெட்டி அனைவருக்கும் வழங்கி மகிழ்ந்தனர். பள்ளி மாணவ, மாணவிகளுக்கு நோட்டு புத்தகம், பென்சில், பேனா, ரப்பர் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளுடன் இனிப்பும் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் பதினைந்தாவது வட்டக் கழக நிர்வாகிகள் பி.டி. ரவிச்சந்திரன், மாவட்ட இலக்கிய அணி நிர்வாகி முகமது வசீம், மாவட்ட பிரதிநிதி செல்வம், மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் எஸ். கோபாலகிருஷ்ணன், வட்ட நிர்வாகிகள் பக்தவச்சலம், கண்ணன், பாலாஜி, எல்லமுத்து ,பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் ஏ. விஜயன், பழையனபாளையம் புஷ்பராஜ், தசரதன், கே.சபரீசன், ரமேஷ், குணசேகரன், நேச ரவி,டென்னிஸ், வக்கீல் டி. டில்லி, விஜயகுமார், பாலன், சாரங்கபாணி, ஏசுராஜ்,எல்லமுத்து, சுந்தர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டை புழல் எம்.நாராயணன் செய்திருந்தார்.

செம்மொழி நாயகர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த நாளை முன்னிட்டு ஈரோடு தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞரின் திருவுருவ சிலைக்கு மாவட்ட கழக செயலாளரும், அமைச்சருமான சு.முத்துசாமி மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினார். நிகழ்வில் ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், மாநில நிர்வாகிகள் எம்.கந்தசாமி, எஸ்.எல். டி.ப.சச்சிதானந்தம் உள்ளிட்ட மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வார்டு, கிளைக் கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

பெரம்பலூர் மாவட்டம் - ஆலத்தூர் வட்டம்

கொளக்காநத்தத்தில் புதிய அரசு கலை - அறிவியல் கல்லூரி!

கல்லூரி மேம்பாட்டிற்காக ரூ. 1 கோடி நிதியினை அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார்!

பெரம்பலூர், ஜூன் 6-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமைச் செயலகத்தில் இருந்து காணொளிக்காட்சி மூலம் பெரம்பலூர் மாவட்டம் கொளக்காநத்தம் உள்பட 11 மாவட்டங்களில் புதிய அரசு கலை அறிவியல் கல்லூரிகளை 26.05.2025 அன்று தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர். கோவி. செழியன், தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா ஆகியோர் முன்னிலையில் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியினை கொளக்காநத்தம் மேல்நிலைப் பள்ளியில் போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் மாவட்ட ஆட்சித்தலைவர் கிரேஸ் பச்சாவ், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் ம.பிரபாகரன், ஆலத்தூர் முன்னாள் ஒன்றியக்குழுத்தலைவர் ந.கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் நேரலை நிகழ்வை பார்த்து, வகுப்பறையில் இனிப்புகளை வழங்கினர்.

பின்னர், இந்நிகழ்ச்சியில் போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தெரிவித்ததாவது

தமிழ்நாட்டில் கல்விக் கண் திறந்தவர் காமராசர் என்பதைப்போல, உயர் கல்விக்கண் திறந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். கலைஞர் அவர்களின் ஆட்சிக் காலத்தில் உயர்கல்விக்கு முக்கியத்து வம் அளிக்கும் வகையில், அதிக கல்லூரிகளும், பல்கலைக்கழகங்களும் உருவாக்கப்பட்டது. அவரின் வழியில் நல்லாட்சி நடத்திவரும் நம் முதலமைச்சர் அவர்கள், கல்வி ஒன்றே யாராலும் அழிக்க இயலாத சொத்து என்பதை உணர்ந்து நம் தமிழ்நாட்டில் கல்விக்கு அதிக முக்கியத்துவம் அளித்து பல்வேறு சிறப்பான திட்டங்களை செயல்படுத்தி வருகின்றார்கள்.

தமிழ்நாட்டில் உயர் கல்வியை மேம்படுத்தும் நோக்கில், அதிக எண்ணிக்கையிலான உயர்கல்வி நிறுவனங்களை தொடங்குதல், அதன் வாயிலாக ஆராய்ச்சி, புதுமைப்படைப்புகள், தொழில்நுட்ப ஆராய்ச்சி ஆகியவற்றில் மாணவர்களின் திறன்களை வளர்த்து, வேலைவாய்ப்பினை உறுதி செய்தல் "நான் முதல்வன்" திட்டத்தின் மூலம் தகுதி வாய்ந்த திறன்மிகு இளைஞர்களை உருவாக்குதல், அரசுப் பள்ளிகளில் ஆறாம் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை படித்த மாணவிகள் உயர்கல்வி பயில "புதுமைப்பெண்" திட்டம் மற்றும் மாணவர்கள் உயர்கல்வி பயில "தமிழ்ப்புதல்வன்" திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் மாதம் ரூ.1000/ உதவித் தொகையாக வழங்குதல், முதல் தலைமுறை பட்டதாரிகளுக்கு சலுகைகள், கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் போன்ற பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருவதால் அகில இந்திய அளவில் உயர்கல்வி சேர்க்கையில் தமிழ்நாடு முதலிடம் வகித்து வருகின்றது. இந்த ஆண்டு முதல் கல்லூரி பயிலும் மாணவ,மாணவிகளுக்கு மடிக்கணினி வழங்கும் திட்டத்தையும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

குன்னம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அரசு பள்ளிகளில் 10,11, மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவிகள் எளிதில் தேர்ச்சி பெறும் வகையில் "தேர்வை வெல்வோம்" என்ற தொகுப்பு எனது சார்பில் அனைவருக்கும் வழங்கப்பட்டது. கடந்த ஆண்டு முதல் பெரம்பலூர், குன்னம், அரியலூர், ஜெயங்கொண்டம் என 4 தொகுதிகளுக்கும் "தேர்வை வெல்வோம்" என்ற புத்தகத் தொகுப்பு வழங்கப்பட்டுள்ளது. மாணவ மாணவிகள் படித்தால் மட்டும் போதாது, படித்தவுடன் அவர்களுக்கு தேவையான வேலை வாய்ப்பு கிடைக்க வேண்டும் என்பதன் அடிப்படையில் குன்னம் பகுதியில் கலைஞர் கணினி மையம் தொடங்கப்பட்டு, 60க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகளுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் வகையில் டேலி (TALLY) பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

இன்றையதினம் தமிழ்நாடு முழுவதும் பல்வேறு 11 மாவட்டங்களில் புதிய அரசு கலை அறிவியல் கல்லூரிகளை தொடங்கி வைத்துள்ளார்கள். அதில் நமது மாவட்டத்தில் கொளக்காநத்தம் போன்ற பின்தங்கிய பகுதியில் இந்த அரசு கலை அறிவியல் கல்லூரி தொடங்கப்பட்டிருப்பதன் நோக்கம், கிராமப்புற ஏழை, எளிய மாணவ மாணவிகளுக்கும் உயர்கல்வி எளிதில் கிடைக்க வேண்டும் என்பதுதான்.

வணிகவியல், கணினி அறிவியல், உயிர்தொழில் நுட்பவியல், பொருளாதாரம் மற்றும் அரசியல் அறிவியல் உள்ளிட்ட 5 பாடப்பிரிவுகளுடன் தொடங்கப்பட்ட இந்தக் கல்லூரியில், 280 மாணவ மாணவிகள் பயிலும் வகையில் இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கல்லூரிக்கான முதல்வர் மற்றும் ஆசிரியர்கள் என 6 பேராசிரியர்களும், 5 அலுவலகப் பணியாளர்களும் என 11 பணியிடங்கள் முதற்கட்டமாக தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இணையவழியாக இதுவரை 1820 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன.

கொளக்காநத்தத்திற்கு புதிய அரசு கலை அறிவியல் கல்லூரியினை வழங்கிய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியினை மக்களின் சார்பில், மாணவ மாணவிகளின் சார்பில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும், இந்தக் கல்லூரி அமைய பரிந்துரை செய்த உயர்கல்வித்துறை அமைச்சர் அவர்களுக்கும், இந்தக் கல்லூரியை பெறுவதற்கு தொடர்ந்து முயற்சி செய்த முன்னாள் ஆலத்தூர் ஒன்றியக்குழுத்தலைவர் என். கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கும் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கின்றேன்.

கல்லூரியின் மேம்பாட்டிற்காக சட்டமன்ற உறுப்பினரின் தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து ரூ.1 கோடி நிதிஒதுக்கீடு செய்து வழங்கியுள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அனைவருக்கும் சமமான கல்வி கிடைக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில் நம் திராவிட மாடல் முதல்வர் அவர்கள் முன்னெடுக்கும் திட்டங்களை மாணவ, மாணவிகள் முறையாகப் பயன்படுத்திக் கொண்டு வாழ்வில் முன்னேற வேண்டும் என மனதார வாழ்த்துகின்றேன்.

இவ்வாறு தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்து, கொளக்காநத்தம் மேல்நிலைப் பள்ளியில், தற்காலிகமாக கல்லூரிக்காக அமைக்கப்பட்டுள்ள வகுப்பறைகளையும், கல்லூரியில் சேருவதற்கு ஆன்லைனில் மூலம் விண்ணப்பிக்க மாணவ மாணவிகளுக்காக அமைக்கப்பட்டிருந்த உதவி மையத்தையும் போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் பார்வையிட்டு, பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கினார்.

இந்நிகழ்வில், கல்லூரிக் கல்வி இயக்குநர் பி.பொன்முத்துராமலிங்கம், கொளக்காநத்தம் அரசு கலை அறிவியல் கல்லூரி முதல்வர் முனைவர். கண்ணதாசன், முதன்மைக் கல்வி அலுவலர் திருமதி முருகம்மாள், மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பா.துரைசாமி, முன்னாள் அரசு வழக்கறிஞர் என்.ராஜேந்திரன் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

எம்.ஏ. சண்முகம்
ஜூன் 6 (1984)

புதுச்சேரி மாநிலக் கழகச் செயலாளராகவும் – சட்டமன்ற உறுப்பினராகவும் – புதுச்சேரி மாநில வீட்டு வசதி வாரியத் தலைவராகவும் பணியாற்றியவர்.

கழகத் தலைவர் கலைஞரிடத்தில் உரிமையோடு பேசக் கூடியவர்.

கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களிலும் மிசா சட்டத்திலும் சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.